கூடுதல் மாவட்ட நீதிமன்றம் **(**விரைவு நீதிமன்றம்**),** விழுப்புரம்**.**

**O.S.No. 24/2021**

தேதி. 10.03.2022

பெயர். திரு.பாலகுமாரன் வா.சா.2

முதல் விசாரணை

நான் வாதி வங்கியில் உதவி மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கு விபரம் எனக்கு தெரியும். கடந்த 5 வருடங்களாக இந்த வங்கியில் பணிபுரிந்து வருகிறேன். எனக்கு சாட்சி சொல்ல நீதிமன்றத்திலிருந்து சம்மன் வந்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அந்த சம்மனில் 3 ஆவணங்களை கொண்டுவரச்சொல்லப்பட்டுள்ளது. S.S.K construction ன் வங்கி கணக்கு எண்.447680623. அந்த வங்கி கணக்கு பட்டியலை கொண்டுவந்துள்ளேன். அது Ex.X1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. S.S.K construction பங்குதாரர் தான் வாதி சிவக்குமார் என்று சொல்லப்பட்டுள்ளது. இந்த வழக்கு பிரதிவாதி பார்த்திபனுக்கும், எங்கள் வங்கியில் கணக்கு இருந்தது. கணக்கு எண்.6231389590 ஆகும். அவருடைய வங்கி கணக்கு பட்டியலை கொண்டுவந்துள்ளேன். அது Ex.X2 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. அந்த வழக்கின் வாதி சிவக்குமார் எங்கள் வங்கியில் 06.01.2021 அன்று எங்கள் வங்கி கணக்கு காசோலை எண்.430040 என்ற காசோலையை வசூலுக்காக தாக்கல் செய்தார். அந்த காசோலையின் நகலை தாக்கல் செய்கிறேன். அது Ex.X3 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. அந்த காசோலை தாக்கல் செய்யப்பட்ட அன்றே அவரது வங்கி கணக்கில் போதிய தொகை இல்லை என்று திருப்பப்பட்டுவிட்டது. 21.01.2020 ல் ரூ.10 லட்சம் பிரதிவாதியின் வங்கி கணக்கில் செலுத்தப்பட்டதாக Ex.X1 ல் உள்ளதா என்றால் அந்த 1 வது மாதத்திற்கு உண்டான கணக்கு பட்டியலை கொண்டு வரவில்லை. வா.சா.ஆ.5 ஆவணம் எங்கள் வங்கியில் வழங்கப்பட்டது தான். அதில் 21.01.2020 ல் ரூ.10 லட்சம் பிரதிவாதியின் வங்கி கணக்கில் செலுத்தப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். 02.03.2021 லும் ரூ.10 லட்சம் பிரதிவாதியின் வங்கி கணக்கில் செலுத்தப்பட்டதாக வா.சா.ஆ–5 ல் உள்ளது என்றால் சரிதான். மேலும் வா.சா.ஆ.5 ல் 26.06.2020 ல் ரூ.8 லட்சம் பிரதிவாதியின் வங்கி கணக்கில் செலுத்தப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். இந்த தொகைகள் பார்த்திபன் வங்கி கணக்கில் அவ்வப்போது சேர்க்கப்பட்டுவிடும்.

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

தற்போது Ex.X1 to Ex.X3 ஆவணம் மட்டும் குறியீடுசெய்துள்ளேன். 06.01.2021 ல் காசோலை தாக்கல் செய்து 430040 என்ற காசோலை திருப்பப்பட்டுள்ளது

என்பது Ex.X3 ல் உள்ளது. 20.01.2020ம் தேதியில் வாதி வங்கி கணக்கில் balance தொகை ரூ.10,79,287.39 உள்ளது. பின்னிட்டு 21.01.2020ம் தேதியில் காசோலை எண்.031960 ரூ.10 லட்சம் debit செய்யப்பட்டுள்ளது. 28.02.2020ம் தேதியில் வாதி வங்கி கணக்கில் balance தொகை ரூ.8,84,277.65 உள்ளது. பின்னிட்டு 02.03.2020ம் தேதியில் காசோலை எண்.031961ல் ரூ.10லட்சம் debit செய்யப்பட்டுள்ளது. பின்னிட்டு 25.06.2020ம் தேதியில் வாதி வங்கி கணக்கில் balance தொகை ரூ.6,93,618.85 உள்ளது. 26.06.2020ம் தேதியில் காசோலை எண்.031981 ரூ.8 லட்சம் debit செய்யப்பட்டுள்ளது.

Sd./-Tr.M.Chenkamalaselvan, B.L.,
Additional District Court(FTC),
Villupuram.